**மின் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., மின்கோட்டம் -2, சேப்பாக்கம், சென்னை-5, அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை : பொறி. ட. மாலதி., பி.இ., எம்.பி.ஏ.,**
**செயற்பொறியாளர், பொ.ப.து.,**

**செயல்முறை ஆணை எண். இ1/ 1902 / 2023 / நாள். .01.2025.**

பொருள்: பணியமைப்பு – பொதுப்பணிதுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.K.தனவேல், மின் கம்பியாளர் தரம்-2. அவர்களின் மனைவி திருமதி.M.தேன்மொழி, அவர்களுக்கு கருணை அடிப்படையில் "இளநிலை உதவியாளர்" பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்2(1)/009278/2023, நாள். 29.11.2023.
2. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் (ம) திட்ட மேலாண்மை துறை, நாள் 08.03.2023.
3. தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.
4. நி2 (1)/004787/2023, நாள். 18.12.2023.
5. கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.நி2/ 3599 / 2023 / நாள்.11.12.2023.
6. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.இ2 / 1992 / 2023 / நாள்.26.12.2023.

*****

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.K.தனவேல், மின் கம்பியாளர் தரம்-2, அவர்களின் மனைவி திருமதி.M.தேன்மொழி, அவர்களுக்கு கருணை அடிப்படையில் மின் கோட்டம்-2 சேப்பாக்கம், சென்னை-5 அலுவலகத்தில் "இளநிலை உதவியாளர்" பதவிக்கு பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து, திருமதி.M.தேன்மொழி, இளநிலை உதவியாளராக 26.12.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை (2)-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (3)-ல் காணும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடிதத்தில், பணியாளருக்கு எந்தவொரு விதித்தளர்வு தேவைப்படாத நிலையில், பணி நியமன அலுவலர் நிலையில் பணிவரன்முறை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருமதி.M.தேன்மோழி, அவர்கள் இளநிலை உதவியாளராக 26.12.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து ஓராண்டு பணியினை 25.12.2024 பிற்பகல் அன்று நிறைவு செய்துள்ளார். மேலும், அவரது பணிப்பதிவேடு மற்றும் கோட்ட அலுவலக கோப்புகளின்படி, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திருமதி.M.தேன்மோழி, அவர்களின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில், அவர் இளநிலை உதவியாளர்ப் பணியில் சேர்ந்த நாளான 26.12.2023 மு.ப முதல் பணிவரன் முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது. தனியர் மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் பணியினை நிறைவு செய்ய வேண்டுமெனவும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதி 23(அ)-ன்படி அவர் தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு "துறை தேர்வுகளாகிய" மாநில அலுவலக நடைமுறைத் தேர்வு, பொதுப்பணித்துறை அரசு அலுவலர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வுகளில் பாகம்-1 மற்றும் பாகம்-2லும் தேர்ச்சி பெற்று சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செயற்பொறியாளர் (மின்)., பொ.ப.து.,
மின்கோட்டம் -2., சேப்பாக்கம், சென்னை-5.

பெறுநர்: திருமதி.M.தேன்மோழி, இளநிலை உதவியாளர், செயற்பொறியாளர் (மின்)., அலுவலகம், பொ.ப.து., மின்கோட்டம்-2., சேப்பாக்கம், சென்னை-5.

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம்., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம்., சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

செயற்பொறியாளர் (மின்)., பொ.ப.து.,
மின்கோட்டம் -2., சேப்பாக்கம், சென்னை-5.